[1973 பிப்ரவரி 7]

Defence Fund

* 54. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that the Tahsildar, Kumbakonam has not deposited with the Government a sum of Rs. 8,000 which was collected from the Village Officers of the Kumbakonam Revenue Division for the purpose of Defence Fund; and

(b) if so, the action taken by the Government in the matter?

தேசியப் பாதுகாப்பு நிதி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேசியப் பாதுகாப்பு நிதிக்காக கும்பகோணம் வருவாய்க் கோட்டத்தைச் சேர்ந்த கிராம அதிகாரிகளிடமிருந்து வசூலித்த ரூ. 8,000 தொகையை கும்பகோணம் தாசில்தார் அரசுக்குக் கட்டாதது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) கும்பகோணம் வட்டத்தைச் சேர்ந்த கிராம அதிகாரிகளிடமிருந்து ரூ. 4,865 மட்டுமே வசூல் செய்யப்பட்டது. தேசியப் பாதுகாப்பு நிதி வசூல் 15—1—1972-ம் நாளோடு நிறுத்தப்பட்டு விட்டதால் இதில் 50 ரூபாயைத் தவிர, எஞ்சிய தொகை முழுதும் திருப்பிக் கொடுக்கப்பட்டது அல்லது, கிராம அதிகாரிகளின் சம்மதத்தோடு தேசியப் பாதுகாப்புப் பத்திரங்கள், வளரும் மாதச் சேமிப்புத் திட்டப் பத்திரங்கள் போன்றவற்றை வாங்குவதற்காக முதலீடு செய்யப்பட்டது. 5 கிராம அதிகாரிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ. 10 விதம் வசூலிக்கப்பட்ட தொகையான ரூ. 50 இன்னும் கும்பகோணம் தாசில்தாரிடம் உள்ளது.

(இ) கிராம அதிகாரிகளுக்கு இத்தொகையைத் திருப்பிக் கொடுக்கத் தாமதப்படுத்தியதற்குப் பொறுப்பானவர்கள் மீது, கும்பகோணம் மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

[1973 பிப்ரவரி 7

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தேசியப் பாதுகாப்பு நிதிக்காக அந்தத் தாசில்தார் கிராம உத்தியோகஸ்தர்களிடமிருந்து பணம் வாங்கியிருக்கிறார். கிட்டத்தட்ட 8 ஆயிரம ரூபாய் அளவிலே அந்தப பணம் வாங்கியதாகவும், அந்தப பணத்தை பல மாதங்கள் கட்டவில்லையென்றும், சொந்தமாக அவர் உபயோகித்துக் கொண்டார் என்றும், கிராம உத்தியோகஸ்தர்களுடைய சங்கத்தின் சார்பில் அவர்கள் ஒரு தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இப்படி வசூல் செய்த பணத்தை அரசு, தேசிய பாதுகாப்பு நிதிக்கு அளிக்காமல், அந்தக் கிராம உத்தியோகஸ்தர்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது என்பதையும், அப்படி அந்தப் பணத்தைச் சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொண்டதாகச் சொல்லப்படுகிற அந்தத் தாசில்தார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதென்றும் அறிய விரும்புகிறேன். இத்தகைய பாதுகாப்பு நிதிக்கு வசூல் செய்து, சொந்த உபயோகம் செய்வதென்பது மிகவும் தவறான காரியமென்பதை அரசு உணரும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தேசிய பாதுகாப்பு நிதிக்காக வசூல் செய்யப்பட்ட பணத்தை இப்படி ஒரு தாசில்தார் கையாண்டது கடுமையான குற்றம்தான். அது பற்றி மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் (சப்-கலெக்டர்) அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அது அரசாங்கத்திற்கு வருமென்று நம்புகிறேன். வந்ததற்குப் பிறகு அரசு தொடர்ந்து நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இப்போதே 6 மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இப்படி முக்கியமான காரியத்தைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்காமல், சப் கலெக்டர் காலதாமதம் செய்ததன் காரணத்தை அரசு ஆராயுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சப்-கலெக்டர் நடவடிக்கை எடுத்திருப்பதாகத்தான் என்னிடத்தில் தகவலிருக்கிறது. நான் இப்போதுதான் முழு விவரத்தைத் தெரிந்துகொண்டிருக்கிறேன். சீக்கிரம் இதுபற்றி நடவடிக்கை எடுக்கும்படி எனது அதிகாரிகள் மூலம் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.